செ.வெ.எண்:354 நாள்:02.06.2018

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் 63 பயனாளிகளுக்கு மானிய விலையிலான அம்மா இருசக்கர ஸ்கூட்டர் மற்றும் 98 சுய உதவி குழுவினருக்கு கடனுதவி என மொத்தம் 261 மகளிருக்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் வழங்கினார்.

------

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அம்மா இருசக்கர வாகனம் மற்றும் சுய உதவி குழுக்களுக்கு கடன் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (02.06.2018) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்துகொண்டு 291 மகளிருக்கு ரூ.51.93 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.முத்துகருப்பன் மற்றும் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.மனோகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அதனடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆண்டுத்தோறும் 1 லட்சம் மகளிருக்கு 50 சதவீத மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கப்படும் என அறிவித்தார்கள். இத்திட்டத்தினை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாள் அன்று மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் சென்னையில் நடைபெற்ற விழாவில் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மகளீரின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்திட என்ற பல திட்டத்ததை வாரி வழங்கியுள்ளார்கள். பெண்களின் சிரமத்தை குறைக்கும் வகையிலான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தியுள்ளார்கள். அம்மாவின் வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஆகியோர் பெண்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இன்று சங்கரன்கோவில் பகுதியை சேர்ந்த 63 மகளிருக்கு ரூ.15.72 லட்சம் மானியத்திலான ஸ்கூட்டர்கள் வழங்கப்படுகிறது. மகளிர்கள் தன்னம்பிக்கையுடன் அரசு உதவிகளை பயன்படுத்தி வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திட வேண்டும். என பேசினார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

உழைக்கும் மகளிருக்கு உதவிடும் வகையில் தமிழக அரசு 50 சதவீத மானிய விலையிலான இருசக்கர வாகன வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தியுள்ளது. 2017-2018ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 1 லட்சம் மகளிர் இத்திட்டத்தில் பயன்பெறுவர் திருநெல்வேலி மாவட்டத்தில் 2017-2018 ம் ஆண்டிற்கு நகர்புற பகுதியில் 2,088 மகளிருக்கும், ஊரக பகுதிகளில் 2,367 என மொத்தம் 4,455 வழங்கப்பட உள்ளது. இன்றைய விழாவில் 65 மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் ரூ.15.72 லட்சம் மதிப்பிலும், 57 சுய உதவி

குழுக்களுக்கு ரூ.5.70 லட்சம் மதிப்பிலான சுழல் நிதியும் 41 சுய உதவி குழுக்களுக்கு ரூ.30.51 லட்சம் மதிப்பிலான அமுத சுரபி - சமுதாய முதலீட்டு நிதி என மொத்தம் 261 மகளிருக்கு ரூ.51.93 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. தமிழக அரசு மகளீரின் வாழ்க்கை தரத்தினையும், தன்னம்பிக்கையும் உயர்திடும் பல திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. நீங்கள் அனைவரும் உங்களது பெண் குழந்தைகளை நன்றாக படிக்க வைக்க வேண்டும். 21 வயதிற்கு பின்பு தான் திருமணம் செய்து வைக்க வேண்டும். கல்வி தான் பெண்களின் தன்னம்பிக்கையை உயர்த்திடும். மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வழங்கப்படும் கடனுதவிகளை பயன்படுத்தி பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும். நீங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு அரசு விற்பனை வாய்ப்பை உருவாக்கித் தரும் அனைவரும் அரசின் திட்டங்களை பயன்படுத்தி வாழ்க்கை தரத்தை உயர்திக்கொள்ள வேண்டும் என பேசினார்.

இவ்விழாவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, மகளிர் திட்ட திட்ட இயக்குநர் திரு.மைக்கேல் அந்தோனி பெர்னாண்டோ, திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மைதிலி முக்கிய பிரமுகர்கள் திரு.கண்ணன் (எ) ராஜு, திரு.ஆவின் ரமேஷ், திரு.ஆறுமுகம், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.கணபதி, மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள் திரு.முருகன், திரு.அருண், திரு.ராமர், திருமதி.லூர்தமேரி, திருமதி.அனிதா மற்றும் அலுவலர்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.